
உ

சிவமயம்



யாழ்ப்பாணம், பண்ணாகம்,

சைவவேளாண் குலதிலகரும்

மலாயன் பென்சனருமாகிய

# ஸ்ரீமான் வெற்றிவேலு சின்னையா


சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."



உயர்திரு. வெற்றிவேலு சின்னையா

தோற்றம்:
5-12-1891

மறைவு:
25-3-1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பண்ணாகமூர்

# வெற்றிவேலு சின்னையா
# நினைவுக் குறிப்புகள்

**தோற்றம் : 5-12-1891** **மறைவு : 25-3-1970**

தந்தையார்: விசுவநாதர் வெற்றிவேலு

தாயார்: வெற்றிவேலு தங்கம்

சகோதரர்கள்: வெற்றிவேலு சின்னத்தம்பி (இறந்தவர்)
,, பரமு
,, நன்னித்தம்பி (இறந்தவர்)
பெரியதம்பி அன்னப்பிள்ளை
வெற்றிவேலு தாமோதரம்பிள்ளை

மனைவியர்: வைத்திலிங்கம் மகள் அன்னப்பிள்ளை (இறந்தவர்)
ஆறுமுகம் மகள் நாகம்மா (இறந்தவர்)
கணபதிப்பிள்ளை மகள் பொன்னம்மா

பிள்ளைகள்: ஆறுமுகசாமி பரமேஸ்வரி (இறந்தவர்)
சின்னையா தியாகராசா
,, சாம்பசிவமூர்த்தி (இறந்தவர்)
,, சத்தியமூர்த்தி
,, சோதிநாதன்
,, கனகநாயகம்
,, கோமளாதேவி (இறந்தவர்)
,, தயாபரசிவம்
,, அன்னரத்தினம்
,, வைகுந்தவாசன்
,, திலகவதி
,, வள்ளுவதாசன்

மருமக்கள்: சின்னக்குட்டி ஆறுமுகசாமி
தியாகராசா தவமணி
சத்தியமூர்த்தி அம்பிகை
சோதிநாதன் கனகம்மா

பேரப்பிள்ளைகள்:
தியாகராசா அருள்மாறன்
தியாகராசா அருள் நிதி
தியாகராசா வேல்மாறன்
சத்தியமூர்த்தி சாரதாமணி தேவி
சத்தியமூர்த்தி உருக்மணி தேவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பண்ணாகம், சைவவேளாளர் குலதிலகரும்
மலாயன் பென்சனருமாகிய

## ஸ்ரீமான் வெற்றிவேலு சின்னையா அவர்கள்

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

---

## தோற்றம்

### வெண்பா

ஆயிரத்தெண் ணூற்றுத்தொண் ணூற்றோரா மாண்டிலே
யேய,விடிசெம்ப ரேரைந்தில் -- நேயவளர்
சின்னையா தோற்றமாஞ் சீரோங்கு பண்ணாக
மன்னுபதி யென்பார் மதி.

## மறைவு

### வெண்பா

எழுபதா மாண்டி லியல்பங் குனியபரந்
தொழுதிருதி யைத்திதியிற் றூய — வுளமேவு
சின்னையா நீறுபுனை சீரரனின் பாதமலர்
நண்ணியநா ளாகு நயந்து.

### ஆசிரியப்பா

திருவள ரிலங்கா புரிதிகழ் வடபாற்
சீருங் கல்வியுந் திருவுந் தோய்ந்து
மருவுபண் ணாக மாபெரும் பதியில்
விளங்குஞ் சைவ வேளிர் பெருங்குலந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவருந் தூய தயாநிதி வள்ளல்
வெற்றி வேலு விளங்கிழை தங்கம்
மாவை மணந்துள மகிழ்ந்தவில் லறத்தின்
மாதவப் பயனய் வாய்ந்த தோன்றல்
அரனடிக் கன்பு செய்த மரராகிய
சின்னத் தம்பி சீருடன் மலாயா
சென்றுத் தியோகம் செய்துயர் பதவிப்
பணிபல புரிந்த பரமுவுமி வர்பின்
நண்ணிய வமரர் நன்னித் தம்பியும்
பிறங்கிடு மலாயன் பென்சனர் பெரிய
தம்பி விழைந்துளம் சார்ந்திடு மினிய
வாருயிர் மனைவி அன்னப் பிள்ளை
மலேசிய நாட்டின் மாகணக் காளர்
உயர்பணி புரிந்திளைப் பாறிய தாமோ
தரம்பிள்ளையையுந் தனது சோதர ராய்க்
கொண்ட பெருந்தகை கோதைய ரன்னப்
பிள்ளை நாகம்மா வெனுமிரு பேரும்
முறைவரு துணைவிய ராயிருந் துமைபதம்
நண்ணி னராக நறைமலர்க் கூந்தல்
பொன்னம் மாவைப் பொற்புடன் மணந்து
'இல்லற மல்லது நல்லற மன்றெனும்'
வாக்கியம் பேணி வாழ்ந்த வள்ளல்
குணதிசைக் 'கிளாங்கு' கோலா லம்பூர்
எனுநக ரங்களில் இருபத் தோரியாண்
டடிணை யில்லா நீடிய காலம்
சிறுப்பர் பிரதம லிகிதர் சேவைப்
பணிபுரிந் தோம்பிய பாராட் டுடையோன்
றந்தெனி கமவின் இஸ்லாமிய மகா
வித்தியாலயத்தில் விளங்கு மாசிரியர்
திருவளர் தியாகராசா சிங்கர்க்
கொம்பனி மனேஜர் குலவிய பளையில்
சத்தியமூர்த்தி வீரகேசரியின்
'புறாவ் றீடர்'பணி புரியுஞ் சோதி
நாதன் இரஞ்சன வச்சகஞ் சேர்ந்த
கனக நாயகம் காரை நகரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேரியாத் தடுப்பு மாவியக்கஞ்சேர்
**தயாபர** **சிவத்துடன்** றண்ணளி **யன்ன**
**ரத்தின** மினிய **வைகுந்த வாசன்**
**திலகவதி** யாந் திருந்திழை **வள்ளுவ**
**தாச** னிவர்களின் தவமருள் தந்தை
தையலர் திலகம் **தவமணி அம்பிகை**
**கனகம்** **மா**வையுங் காசினி புகழும்
மருகிய ராக்கி மகிழ்ந்து புரந்தவன்
**அருள்மா** **றன்பின்** **வேல்மாற** னருள்
நிதியுடன் **சாரதா தேவி ருக்மணி**
**தேவியும் பேர மக்களாம் செல்வன்.**
பிறந்த பொன்னுடு பிறங்கு மெய்கண்டான்
மாவித்தி யாலயத் தாபக மனேஜர்
பதவியி லிருந்து பணிபல புரிந்தோன்
ஐக்கிய நாணய சங்க மமைத்து
சிக்கனம் பேணும் சீரினை யளித்தோன்
'நாட்டி னுயர்வு கூட்டுற' வென்னும்
நன்மொழி யறிந்து நலன்புரி **சங்கம்**
**அமைத்து** வளர்ந்திட வயரா துழைத்தோன்
மாநகர் மூளாய் வைத்திய சாலையின்
தாபக வுறுப்பினர் தமக்கு ளொருவராய்
அமர்ந்திருந் தரும்பணி யாற்றி வளர்த்தோன்
சிசவத் **தனைப்பதி** விழைந்தமர் முருக
மூர்த்தி கோவிலின் முறைபரி பாலன
சபையமர்ந் தங்கம் சார்ந்து துவஜ
விழாவு பயந்தரும் மெய்யடி யாளுய்
**விளங்கிய** தொண்டன் விரும்பி ஞாலம்
போற்றுஞ் சேவைகள் புரிந்துளம் பூக்குந்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
தண்ணிலா வேணியன் றுளிணை
நினைந்து நடந்தனன் நீடுக சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி துன்பம்

### விருத்தம்

மாதவம் புரிந்துமாலை யணிந்துள மகிழ்ந்து வாழ்வு
பூதலம் பொலிய நின்றேன் பொய்யென வுணர்ந்தேனையா!
மாதிவள் தமியளாகி மாநிலம் பழிக்க வாழ்வின்
சோதனை யிதுவோ நாதா! தொல்வினை சூழ்ந்ததேயோ!

## மக்கள் துன்பம்

### வெண்பா

வேண்டுங் கலையும் விளையும் பெருவாழ்வும்
யாண்டு நிலைக்க வெமைப்புரந்தீ — ராண்டுபல
சென்றகன்று தீர்ந்திடினுஞ் சேயர் பெருந்துயர
நின்றகலு மாறில்லை நீடு

## மருமக்கள் துன்பம்

அன்புள்ளம் மறக்கலாமோ அவர் தோற்றம் மறக்கலாமோ
பண்பட்டாரோடு வாழ்ந்த பாசத்தை மறக்கலாமோ
அன்பினர் மாமன் வாழ்வின் அந்தத்தில் தொடங்கும் இந்தத்
துன்பத்தை மறக்கலாமோ தொடர்பினி வருமோ மாமா.

## சுற்றம்

### விருத்தம்

சந்தையிற் கூட்டம் போலுஞ் சார்ந்திடு சுற்றமாகும்
முந்தையோர்வார்த்தையீதுமுதுமொழி மறந்தேமார்ந்தோம்
சிந்தையிர்! திகைத்தோமின்று செய்யுமாறறியோமுள்ளம்
நொந்தனம் பெரும! நும்மை யாமினி நுகரலாமோ!

## தேற்றம்

### விருத்தம்

ஆண்டுதோ றுண்டதாக வழுதுவீழ்ந் தலறி யென்ன
மாண்டபேர் மீண்டகாதை மாநில மறிந்த துண்டோ!
தாண்டவ மாடுமையன் றுளிணை சார்ந்தோர்க்கென்று
நீண்டபே ரின்பமீது நினைந்தறம் பூண்டு வாழ்மின்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

# திருவருட்பாத்திரட்டு

**விநாயகர் திருப்புராணம்**

வானுலகு மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

திருமுறை 1 திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பா லன்பு செய்வா ஞதரிக்கின்ற துள்ளம்
ஆயமாய காயந்தன்னு ளைவர் நின்றொன்ற லொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே.

திருமுறை 2

பவளமாய்ச் சோடையாய் நாவெழாப்
பஞ்சு தோய்ச் சட்டவுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார்
போல நீ வெள்கினயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந்
தேறிய கான கண்டன்
அவனதா ரூர் தொழு துய்யலா
மையல் கொண் டஞ்ச நெஞ்சே.

திருமுறை 3

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மை யிறுந்துணை அஞ்செ ழுத்துமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை 4 திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

உற்றாராருளரோ வுயிர் கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லானமக் குற்றாராருளரோ
தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித்தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக்கண்டு
கொண்டேன்.

திருமுறை 5

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலு மிப்பூமிசை
யென்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
வின்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

திருமுறை 6

எண்ணுகேனென் சொல்லி யெண்ணுகேனோ வெம்
பெருமான் றிருவடியேயெண்ணி னல்லாற்
கண்ணிலேன் மற்றோர்களை கணில்லேன் கழலடியே
கைதொழுது காணினல்லா
லொண்ணுளே யொன்பது வாயில் வைத்தாயொக்க
வடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியனே யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருமுறை 7 சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

வாழ்வாவது மாயம் மிதுமண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பழிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணன் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதார மெனீரே.

திருமுறை 8 மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்துருகி நெக்கு நெக்(கு)
ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்
தாடும் நின் கழற் போது நாயினேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவேண்டும் நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

திருமுறை 9 திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே.

திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே,

திருமுறை 10 திருமந்திரம்

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டீரு மக்களும்
ஊர்த்துறை காலே யொழிவ ரொழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரி மூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியிலோரே.

திருமுறை 11 சேரமான் பெருமாள் நாயனார்

பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்து புக்கிங்
குய்யா வுடம்பினே டோர்வ நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம் ஆயினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமறவா வரம் வேண்டுவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாதவின் பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டேலுன்னை
மறவாமை வேண்டு மின்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி யென்று
யறவா நீயாடும் போதுன்னடியின் கீழிருக்க வென்றார்.

கந்தரலங்காரம்

அசத் தெல்லாம் சத்தாக
அஞ்ஞான இருள் ஞான ஒளியாக
கொடி அழி வெனும் சக்தி அமுதமாக
அருள்வாய் அவனிக் கெல்லாம்.

திருப்புகழ்

இரவு பகல் பலகாலும்
இயலிசைமுத் தமிழ் கூறித்
திர மதனைத் தெளிவாகத்
திருவருளைத் தருவாயே
பர கருணைப் பெருவாழ்வே
பரசிவதத் துவஞானா
அர னருள்சற் புதல்வோனே
அருணகிரிப் பெருமானே.

## எமது நன்றி.

உயர்திரு. வெ. சின்னையா அவர்களின் மரணச் சடங்கில் நேர்முகமாகச் சமூகம்கொடுத்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் துக்கம் தெரிவித்தவர்களுக்கும், அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது தாழ்மையான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நினைவுமலரை அமைத்துத் தந்த தலைமை ஆசிரியர் K. S. விஞசித்தம்பி, (யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வணக்கம்

பண்ணைகம்,
சுழிபுரம்.
25-5-70

இவ்வண்ணம்,
திருமதி சின்னையாவும்
பிள்ளைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முருகன் அச்சகம்,
104, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org